Crl.Misc/ 39

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
VALANGAIMAN

Calendar
Miscellaneous **Case No. CC. 113/2025**
Preliminary Register

Deposition of **PW- 1 LW -1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | சத்யலீலா | Husband Name | : | கிருஷ்ணமூர்த்தி |
| Village | : | ஆலங்குடி | Taluk | : | வலங்கைமான் |
| Caste | : | | Calling | : | டெய்லர் |
| Religion | : | | Age | : | 45 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 09th day of February 2026.

எதிரி ஆஜர் . எதிரி தரப்பு வழக்கறிஞர் முன்னிலை.

<u>முதல் விசாரணை-</u>

நான் தற்போது மேற்படி முகவரியில் வசித்து டைய்லராக பணிபுரிந்து வருகிறேன். நான் எனது வீட்டில் எனது குழந்தைகளுடன் வசித்து வருகிறேன். எனது கணவர் இறந்துவிட்டார். ஆஜர் எதிரியை தெரியும். எனது தெருக்காரர். சுமார் 6 வீடு தள்ளி அவருடைய வீடு உள்ளது. கடந்த 12.01.2024ம் தேதி இரவு 12.00 மணியளவில் வழக்கு சம்பவம் நடந்தது. எனது வீடு ரோட்டின் மேலே உள்ளது . ஆஜர்

எதிரியின் வீடு தெருவிற்குள் உள்ளது. ஆஜர் எதிரிக்கும் அவருடைய அண்ணனுக்கும் பிரச்சனை ஏற்பட்டு என் வீட்டு வாசலில் சண்டை போட்டுக்கொண்டார்கள். சத்தம் கேட்டு நான் வெளியில் சென்று பார்த்தபோது எதிரி தான் கையில் வைத்திருந்த கத்தியால் எனது வீட்டின் கதவை குத்தி உடைத்து உள்ளே வந்துவிட்டார். உள்ளே வந்து என்னை குச்சிகாரி தேவிடியா என்று தகாத வார்த்தைகளால் திட்டினார். நீ ஏண்டி எங்கள் பிரச்சனைக்குள் வருகிறாய் என்று கேட்டார். நான் ஆஜர் எதிரியை பார்த்து நீங்கள் அத்துமீறி எனது வீட்டுக்குள் நுழைந்து பிரச்சனை செய்கிறீர்கள் என்று கூறினேன். எதிரி கையில் வைத்திருந்த கத்தியை எனது கழுத்தில் வைத்து மிரட்டினார். தையல் மிஷினை காலால் உதைத்து உடைத்துவிட்டார். அருகிலிருக்கும் எனது கொழுந்தனார் கண்ணன் என்பவருக்கும் இவ்வழக்கு சம்பவம் தெரியும். அவரிடமும் ஆஜர் எதிரி பிரச்சனை செய்தார். இரவு நேரம் என்பதால் மறுநாள் 13.01.2024 ம் தேதி காலை 07.00 மணியளவில் வலங்கைமான் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். புகார் மனு **அ.த.சா.ஆ.1 ஆக** குறியீடு செய்யப்படுகிறது. என்னுடன் வந்தவர் மேற்படி புகார் மனுவினை எழுதினார். அதிலுள்ள விபரங்கள் என்னிடம் படித்து காண்பித்தார். நான் அதில் கையொப்பம் செய்தேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை** -

நான் சம்பவம் நடந்ததாக கூறுவது சுமார் 2 மணிநேரம் நடந்திருக்கும் என்றால் சரிதான். சாட்சி குருமூர்த்தி எனது அண்ணன் முறை ஆவார். தெருவில் உள்ளவர்கள் நான் நடந்ததாக கூறும் சம்பவத்தை பார்த்தார்கள் என்றால் சரிதான். நான் சம்பவம் நடந்தவுடன் 100 க்கு போன் செய்தேன் என்றால் சரிதான். தகவல் தெரிவித்தவுடன் எத்தனை போலீசார் வந்தார்கள் என்றால் சுமார் 7 போலீசார்கள் வந்தார்கள். அவர்களிடம் நான் நடந்த விபரத்தினை கூறினேன் என்றால் சரிதான். அவர்களிடம் நான் உடைந்ததாக கூறும் கதவு மற்றும் தையல் மிஷினை

காண்பித்தேன் என்றால் சரிதான். அவர்கள் அதனை எழுதிக்கொண்டார்களா என்றால் எழுதிக்கொண்டார்கள். புகாரிலுள்ள கையொப்பம் மட்டும்தான் என்னுடையது என்றால் சரிதான். மேற்படி புகாரினை யார் எழுதினார்கள் எத்தனை பக்கம் எழுதினார்கள் என்று தற்போது எனக்கு நியாபகம் இல்லை என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் கூறியுள்ள என்னுடன் வந்தவர் புகாரினை எழுதினார் என்பதையும் அதனை நான் படித்து பார்த்து கையொப்பம் செய்தேன் என்பதனையும் போலீசார் கூறிதான் நான் கூறுகிறேன் என்றால் சரிதான். சம்பவத்திற்கு முன்பே ஆஜர் எதிரியின் குடும்பத்திற்கும் எனக்கும் பேச்சுவார்த்தை கிடையாது என்றால் சரியல்ல. சாட்சி அறிவழகன் எனது கொழுந்தனார், சாட்சி இளையராஜா எனது சித்தப்பா ஆவார். ஆஜர் எதிரிக்கும் அவருடைய அண்ணனுக்கும் பிரச்சனை ஏற்பட்டதாக நான் கூறியுள்ள விபரத்தை எனது புகாரிலோ வாக்குமூலத்திலோ கூறவில்லை என்றால் சரிதான். எதிரி தான் கையில் வைத்திருந்த கத்தியால் எனது வீட்டின் கதவை குத்தி உடைத்து உள்ளே வந்துவிட்டார் என்று எனது புகாரிலோ வாக்குமூலத்திலோ கூறவில்லை என்றால் சரிதான். நான் ஆஜர் எதிரியை பார்த்து நீங்கள் அத்துமீறி எனது வீட்டுக்குள் நுழைந்து பிரச்சனை செய்கிறீர்கள் என்று கூறினேன். எதிரி கையில் வைத்திருந்த கத்தியை எனது கழுத்தில் வைத்து மிரட்டினார் என்று எனது புகாரிலோ வாக்குமூலத்திலோ கூறவில்லை என்றால் சரிதான். எனது கொழுந்தனார் கண்ணனிடமும் ஆஜர் எதிரி பிரச்சனை செய்தார் என்றும் காலை 07.00 மணியளவில் வலங்கைமான் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன் என்றும் எனது புகாரிலோ வாக்குமூலத்திலோ கூறவில்லை என்றால் சரியல்ல. நான் புகாரினை 13.01.2024 ம் தேதி காலை 07.00 மணிக்கு கொடுத்தேன் என்று கூறியுள்ளது தவறானது என்றால் சரியல்ல. நான் சொன்ன நாள் நேரத்தில் புகார் கொடுக்கப்படவில்லை என்றால் சரியல்ல. எனது வீட்டிற்கும் காவல் நிலையத்திற்கும் இடையே 5 கி.மீ தூரம் இருக்குமா என்றால் சுமார் 7 கி.மீ தூரம் இருக்கும். நான் சொன்னது போல் எவ்வித சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. ஆஜர் எதிரிக்கும் எனக்கும் உள்ள முன்விரோதம் காரணமாக அவர்மீது

எனது குடும்பத்தினர் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய்புகார் கொடுத்து அதற்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை - இல்லை**

என்னால் சொல்லப்பட்டு என்னுடைய மேற்பார்வையில் என்னுடைய ஆணையின் கீழ் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு எதிரியின் முன்னிலையில் சாட்சிக்கு விளக்கப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

JESU BALAN

Digitally signed by JESU BALAN
Date: 2026.02.09 18:01:24 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,

வலங்கைமான்.

Crl.Misc/ 39

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE

VALANGAIMAN

Calendar

Miscellaneous **Case No. CC. 113/2025**

Preliminary Register

Deposition of **PW- 2 LW-2**

| Name | : | கண்ணன் | Father Name | : | சின்னப்பா |
|---|---|---|---|---|---|
| Village | : | ஆலங்குடி | Taluk | : | வலங்கைமான் |
| Caste | : | | Calling | : | லோடுமேன் |
| Religion | : | | Age | : | 51 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 09th day of February 2026.

எதிரி ஆஜர் . எதிரி தரப்பு வழக்கறிஞர் முன்னிலை.

**<u>முதல் விசாரணை-</u>**

நான் தற்போது மேற்படி முகவரியில் வசித்து லோடுமேனாக பணிபுரிந்து வருகிறேன். அ.சா.1 ஐ தெரியும். எனது தம்பி மனைவி, மற்றும் எனது பக்கத்துவிட்டுக்காரர். ஆஜர் எதிரியை தெரியும். என்வீட்டிலிருந்து 5 வீடு தள்ளி அவர் வீடு உள்ளது. கடந்த 12.01.2024 ம் தேதி இரவு 12.00 மணியளவில் நான் வீட்டில் தூங்கிக்கொண்டிருந்தபோது சத்தம் கேட்டு வெளியில் வந்தபோது ஆஜர் எதிரி கையில் கத்தியுடன் அவரது வீட்டு உறுப்பினர்களுடன் பிரச்சனை செய்து கொண்டிருந்தார். பின்னர் அ.சா.1 வீட்டில் பிரச்சனை செய்து அ.சா.1 ஐ குச்சிகாரி

என்று கெட்ட வார்த்தைகளால் திட்டி தையல் மிஷினை உடைத்து விட்டார். நான் சென்று பார்த்தபோது ஆஜர் எதிரி அங்கிருந்து ஓடிவிட்டார். சம்பவம் குறித்து அசா.1 காவல் நிலையம் சென்று புகார் கொடுத்த விபரம் எனக்கு தெரியும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை** -

அ.சா.1 எனது தம்பி மனைவி ஆவார். ஆஜர் எதிரியின் குடும்பத்திற்கும் எங்கள் குடும்பத்திற்கும் முன்விரோதம் பேச்சுவார்த்தை கிடையாது என்றால் சரியல்ல. சம்பவம் நடந்ததாக கூறும் இடத்திற்கு அருகாமையில் நிறைய வீடுகள் இருக்கின்றன என்றால் சரிதான். நான் சொன்னதுபோல் எவ்வித சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. எங்கள் குடும்பத்திற்கும் எதிரியின் குடும்பத்திற்கும் உள்ள முன்விரோதம் காரணமாக அ.சா.1 ன் மூலம் புகார் கொடுத்து அதற்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை - இல்லை**

என்னால் சொல்லப்பட்டு என்னுடைய மேற்பார்வையில் என்னுடைய ஆணையின் கீழ் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு எதிரியின் முன்னிலையில் சாட்சிக்கு விளக்கப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

JESU BALAN Digitally signed by JESU BALAN Date: 2026.02.09 18:01:36 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,

வலங்கைமான்.

Crl.Misc/ 39

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE VALANGAIMAN

Calendar

Miscellaneous **Case No. CC. 113/2025**

Preliminary Register

Deposition of **PW- 3 LW-3**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | குருமூர்த்தி | Father Name | : | மருதையன் |
| Village | : | ஆலங்குடி | Taluk | : | வலங்கைமான் |
| Caste | : | | Calling | : | விவசாயம் |
| Religion | : | | Age | : | 41 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 09th day of February 2026.

எதிரி ஆஜர் . எதிரி தரப்பு வழக்கறிஞர் முன்னிலை.

**முதல் விசாரணை-**

நான் தற்போது மேற்படி முகவரியில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். அ.சா.1 மற்றும் அசா.2 ஐ தெரியும். எனது உறவுக்காரர்கள். ஆஜர் எதிரியை தெரியும். என்வீட்டிலிருந்து 4 வீடு தள்ளி அவர் வீடு உள்ளது. கடந்த 12.01.2024 ம் தேதி இரவு 12.00 மணியளவில் நான் வீட்டில் தூங்கிக்கொண்டிருந்தபோது சத்தம் கேட்டு வெளியில் வந்தபோது அ.சா.1 ன் வீட்டில் சத்தம்கேட்டது. நான் சென்று பார்த்தபோது ஆஜர் எதிரி கையில் கத்தியுடன் அ.சா.1ன் வீட்டில் நின்றுகொண்டு குத்திடுவேன் என்று மிரட்டி அருகில் இருந்த தையல் மிஷினை உடைத்துவிட்டார். அ.சா.1 ஐ

கெட்ட வார்த்தைகளால் திட்டினார். பின்னர் ஆஜர் எதிரி அங்கிருந்து ஓடிவிட்டார். சம்பவம் குறித்து அசா.1 காவல் நிலையம் சென்று புகார் கொடுத்த விபரம் எனக்கு தெரியும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை** -

போலீசார் என்னிடம் கையொப்பம் பெற்றுக்கொண்டு என்ன சாட்சியம் கூறவேண்டும் என்று படித்து காண்பித்தார் அதனை நான் சாட்சியமாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். எனது வீட்டிற்கும் அ.சா.1 ன் வீட்டிற்கும் சுமார் 100 மீட்டர் தூரம் இருக்கும் என்றால் சரியல்ல. நான் சொன்னதுபோல் எவ்வித சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும் எதிரி அ.சா.1 ஐ திட்டவோ மிரட்டவோ இல்லை என்றாலும் சரியல்ல. முன்விரோதம் காரணமாகவும் அ.சா.1 எனது உறவினர் என்பதாலும் அ.சா.1ன் மூலம் புகார் கொடுத்து அதற்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை - இல்லை**

என்னால் சொல்லப்பட்டு என்னுடைய மேற்பார்வையில் என்னுடைய ஆணையின் கீழ் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு எதிரியின் முன்னிலையில் சாட்சிக்கு விளக்கப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

JESU BALAN Digitally signed by JESU BALAN Date: 2026.02.09 18:01:48 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,

வலங்கைமான்.